கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். திருமங்கலம்

06.12.2022

**அசல் வழக்கு எண். 148/2020**

**வா.சா. 1 – விருமாண்டி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**ஆரம்பித்த நேரம் : 12.10 PM**

என்ன பரிகாரம் கோரி என் அப்பா வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்று கேட்டால் எங்கள் இடம் என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.2 ஆவணமான கழுவத்தேவர் மகன் விருமாண்டி, விருமாண்டி மகன் பாண்டி ஆகிய இரண்டுபேரும் சேர்ந்து மாயாண்டித்தேவருக்கு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்ததாக உள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் என் அப்பா ஆலமரத்தான் என்ற விருமாண்டிக்கு கிரையம் கொடுத்ததாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. கழுவத்தேவர் யார் என்று தெரியுமா என்று கேட்டால் தெரியாது.கீழக்குயில்குடியைச் சேர்ந்த கழுவத்தேவர் மகன் கருத்தண்ணனனை தெரியுமா என்று கேட்டால் தெரியாது. கருத்தக்கண்னனன் மகன் பாண்டியை தெரியுமா என்று கேட்டால் வழக்கு சமயத்தில்தான் தெரியும். பாண்டியின் தந்தை பெயர் தெரியுமா என்று கேட்டால் தெரியாது. சம்பவ சமயத்தில் தாவா இடத்தில் 1ம் பிரதிவாதி பாண்டி இருந்தாரா என்று கேட்டால் இல்லை. 1ம் பிரதிவாதி பாண்டி நாகமலை புதுக்கோட்டை காவல் நிலையத்தில் தங்களது இடத்திற்குள் அத்துமீறி நுழைந்ததாக எங்கள் மீது புகார் கொடுத்தாரா என்று கேட்டால் இல்லை. 1ம் பிரதிவாதி பாண்டி மீது புகார் கொடுத்தோமா என்று கேட்டால் புகார் கொடுத்தோம். மாயாண்டித்தேவர் எங்களுக்கு எந்த கிரையமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரையம் கொடுத்துள்ளார். 1ம் பிரதிவாதி பாண்டியின் தந்தை கருத்தகண்ணன் மகன் பாண்டி என்பதற்கு பதிலாக விருமாண்டி மகன் பாண்டி என்பவர் எழுதிக் கொடுத்ததாக கிரைய ஆவணம் போலியாக எழுதிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல். 1ம்

பிரதிவாதி தாவா சொத்தினை எந்தக்காலத்திலும் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 1/3 பங்கு 12–3/4 செண்டு 1ம் பிரதிவாதிக்கு தருவதாக சொல்லி காவல் நிலையத்தில் பேச்சுவார்த்தைக்கு அழைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு சட்டப்படி கிடைக்கக்கூடிய 1/3 பங்கு சொத்தினை நான் அபகரித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தன்னுடைய நிலத்தில் விவசாயத்திற்காக உழுது கொண்டிருந்த நேரத்தில் நான் தடுத்ததால் 1ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் என் மீதும், என் தந்தை மீதும் புகார் கொடுத்தார் என்றும், அதனால் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தினை அபகரிக்கும் நோக்குடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஊரில் என் தகப்பனாரை விருமாண்டி என்று கூப்பிடுவார்கள் என்றும் அதனால் தாவாசொத்தினை அபகரிக்கும் நோக்குடன் ஆலமரத்தான் என்ற விருமாண்டி என்று என் தகப்பனாருக்கு இல்லாத பெயரினை சேர்த்துக் கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் முதியவர் என்பதால் இந்த வழக்குரை தாக்கல் செய்த விபரமே என் தகப்பனாரக்கு தெரியாது என்றும், என் தகப்பனார் கையெழுத்தை அவர் போட்டதாக நான் கையெழுத்து போட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் சொத்தினை அபகரிக்கும் நோக்குடன் நான் பொய்யான விபரங்கள் சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**முடிவடைந்த நேரம் : 12.25 PM**

Sd/–விருமாண்டி

Sd/–G.Ramasankaran,
ADM, Thirumangalam.